பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 07 2026 SUNDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி திரும்பினார்.

2. மறைந்த திரைப்பட பின்னணிப் பாடகி எஸ். ஜானகியின் இறுதிச் சடங்கு முழுஅரசு மரியாதையுடன் இன்று மாலை மைசூருவில் நடைபெறவுள்ளது.

3. நிறுவனங்கள் வருங்கால வைப்பு நிதி குறித்த தகவல்களை வெளியிடுவது தொடர்பாக, ஒருமுறை விலக்கு அளிக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

4. ஏமன் நாட்டிற்கு இந்தியர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை வெளியுறவு அமைச்சகம் திரும்பப் பெற்றுள்ளது.

5. உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் அர்ஜென்டினா, இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி திரும்பினார்.

ஆறு நாள் பயணத்தின் போது, முதலில் இந்தோனேஷியா சென்ற பிரதமர், அந்நாட்டு அதிபர் Prabowo Subianto-வுடன் இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

அங்கிருந்து ஆஸ்திரேலியா சென்ற பிரதமர், அந்நாட்டு பிரதமர் Anthony Albanese-சுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தியா - ஆஸ்திரேலியா தொழிலதிபர்கள் மாநாட்டிலும் அவர் உரையாற்றினார்.

நேற்றுமுன்தினம் நியூஸிலாந்து சென்ற திரு. நரெந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் Christopher Luxon-னுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

>>>>><<<<<

இந்திய பெருங்கடல் மற்றும் இந்தோ - பசிபிக் பகுதியில், இந்தியா முன்னணி நாடாக விளங்குவதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. Sambit Patra, செஷல்ஸ் மற்றும் இந்தோனேஷியாவிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பயணம் மேற்கொண்டது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உதவியுள்ளதாக கூறினார்.

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பொருளாதாரத்தில் முக்கிய மைல் கல் என்றும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மறைந்த திரைப்பட பின்னணிப் பாடகி எஸ். ஜானகியின் இறுதிச் சடங்கு முழுஅரசு மரியாதையுடன் இன்று மாலை மைசூருவில் நடைபெறவுள்ளது.

உடல்நலக்குறைவால் நேற்று அதிகாலை மைசூரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மைசூரு மகாராஜா கல்லூரி மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு, ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

1938ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் தேதி பிறந்த எஸ். ஜானகி, தமிழ், தெலுகு, கன்னடம், மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் 48 ஆயிரத்து மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

4 தேசிய விருதுகள், தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களின் விருதுகள் உட்பட 33 விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

எஸ். ஜானகியின் ஏராளமான பாடல்கள் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளன.

(சவுண்ட் பைட் - பாடல் 60 செகண்ட்ஸ்)

எஸ். ஜானகியின் மறைவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு. விஜய் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், எஸ். ஜானகியின் மறைவு இசையுலகிற்கு பேரிழப்பு என்று கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பல மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ள எஸ். ஜானகி, தனது இனிமையாக குரலாலும், உணர்வுப்பூர்வமான இசை வெளிப்பாட்டாலும், பல தலைமுறையினரின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

எஸ். ஜானகியின் மறைவு இந்திய திரைப்பட இசையுலகிற்கு பேரிழப்பு என்று இசையமைப்பாளர் திரு. இளையராஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - இளையராஜா 44 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

நிறுவனங்கள் வருங்கால வைப்பு நிதி குறித்த தகவல்களை வெளியிடுவது தொடர்பாக, ஒருமுறை விலக்கு அளிக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டம் 6 மாதங்கள் வரை நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி சட்டத்திற்கு உட்பட்டு, வருங்கால வைப்பு நிதி வைத்துள்ள நிறுவனங்கள் இத்திட்டத்தை பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, மண்டல அலுவலகத்தில் நிறுவனங்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஏமன் நாட்டிற்கு இந்தியர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை வெளியுறவு அமைச்சகம் திரும்பப் பெற்றுள்ளது.

ஏமனில் உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்ட நிலையில், கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியர்கள் அங்கு செல்வதற்கு வெளியுறவு அமைச்சகம் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

அங்கு நிலவும் பாதுகாப்பு சூழலை கருத்தில் கொண்டு, இந்தியர்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அந்நாட்டிற்கு தேவையில்லாத பயணத்தை தவிர்க்குமாறும் மத்திய அரசு கேட்டுக் கொண்டது.

தற்போது, ஏமன் நாட்டில் நிலைமை சீரடைந்துள்ளதை அடுத்து, அந்நாட்டிற்கு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் திரும்பப் பெறுவதாக வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

மகாராஷ்டிரா மாநிலம், புனேயில் நேரிட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 8ஆம் தேதி அப்பகுதியில் உள்ள மாநகர நிர்வாக கட்டிடம் மீது, குப்பைகள் சரிந்து, இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த கட்டிடத்தில் 23 பேர் சிக்கியதை அடுத்து, இந்திய ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல்துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த கட்டிடத்திலிருந்து 14 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

>>>>><<<<<

கத்தாரின் முன்னாள் அரசர் Emir Sheikh Hamad Bin Khalifa இன்று காலமானார். அவருக்கு வயது 74.

18 ஆண்டுகள் கத்தார் நாட்டின் அரசராக இருந்த அவர், கடந்த 2013ஆம் ஆண்டு தமது பதவியை அவருடைய மகனுக்கு வழங்கினார்.

அவரது பதவிக் காலத்தில் கத்தார் நாடு, எரிசக்தி உற்பத்தியில் உலகிலேயே முன்னணி நாடாக விளங்கியது.

அவரது காலத்தில் தான் Aljazeera செய்தி நிறுவனம் தொடங்கப்பட்டது.

>>>>><<<<<

BAVI புயல் கிழக்கு சீனாவின் Taizhou பகுதியில் கரையை கடந்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 20 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

முன்னதாக, ஜப்பானின் தெற்கு Sakishima தீவு மற்றும் வடக்கு தைவானை ஒட்டிய பகுதிகளில் இந்த புயல் கடந்தது.

மணிக்கு 144 கிலோமீட்டர் வேகத்தில் வீசிய இந்தப் புயலால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

இருப்பினும், பிலிப்பின்ஸில் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கனமழை காரணமாக 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>><<<<<

உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் அர்ஜென்டினா, இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

காலிறுதி ஆட்டங்களில் அர்ஜென்டினா 3-1 என்ற கோல்கணக்கில், சுவிட்சர்லாந்தையும், இங்கிலாந்து 2-1 என்ற கோல்கணக்கில் நார்வேயையும் வென்றன.

வரும் புதன்கிழமை நள்ளிரவு மணி 12.30க்கு Dallas-ல் நடைபெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

*வியாழக்கிழமை நள்ளிரவு மணி 12.30-க்கு Atlanta-வில் நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா - இங்கிலாந்தை எதிர்த்து விளையாடுகிறது.*

*>>>>><<<<<*

*லண்டனின் Lords-ல் நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இரண்டாம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 154 ரன் எடுத்திருந்தது.*

*இந்தியா தற்போது 269 ரன் முன்னிலையில் உள்ளது.*

*முதல் இன்னிங்ஸில் இந்தியா 285 ரன்னும், இங்கிலாந்து 170 ரன்னும் எடுத்துள்ளன.*

*மூன்றாவது நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*சீனாவின் Haikou-வில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஆடவர் கைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியா - பஹ்ரைனை வென்றது.*

*>>>>>END<<<<<*